www.manthiras.com

ஓம் குஹப்ரஹ்மனே நமஹே

ஸ்ரீபாம்பன்-ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்

அருளிச் செய்த

# பகை கடிதல்

திருவளர் சுடருருவே, சிவைகரம் அமருருவே,
அருமறை புகழுருவே, அறவர்கள் தொழுமுருவே,
இருள் தரும்ஒளி யுருவேயென நினை என தெதிரே
குருகுகன் முதன்மயிலே, கொணர்தியுன் இறைவனையே.

மறைபுகழ் இறைமுனரே, மறைமுதல் பகருருவே,
பொறைமலி யுரகுருவே, புனநடை தருமுருவே
இறையிள முகவுருவே, எனநினை எனது எதிரே
குறைவறு திருமயிலே, கொணர்தியுன் இறைவனையே.

இதரர்கள் பலர்பொரவே, இவணுறை எனதெதிரே,
மதிரவி பலவெனதேர், வளர்சரணிடையெனமா,
சதுரொடு வருமயிலே, தடவரை யசைஉறவே,
குதிதரு மொருமயிலே, கொணர்தியுன் இறைவனையே.

பவநடை மனுடர்முனே படருறு மென தெதிரே,
நவமணி நுதலணியோர் நகைபல மிடறு அணிமால்,
சிவணிய திருமயிலே, திடனொடு நொடிவலமே
குலவயம் வருமயிலே, கொணர்தியுனி றைவனையே.

அழகுறு மலர்முகனே, அமரர்கள் பணிகுகனே,
மழவுறு உடையவேன, மதினனி பெரியவனே
இழ விலர் இறையவனே, யென நினையெனதெதிரே
குழகது மிளிர்மயிலே, கொணர்தியுன் இறைவனையே.

இணையறு மறுமுகனே, இதசசி மருமகனே
இணரணி புரள்புயவனே, யெனநினை யெனதெதிரே,
கணபண வரவுரமே, கலைவுற வெழுதருமோர்
குணமுறு மணிமயிலே, கொணர்தியுன் இறைவனையே.

எளியவ, என்இறைவ, குகா, என நினையெனதெதிரெ,
வெளிநிகழ் திரள்களை மீன்மிளிர்ச்சினை யெனமிடைவான்,
பளபள வெனமினுமா பலசிறை விரிதருநீள்,
குளிர்மணி விழிமயிலே கொணர்தியுன் இறைவனையே.

இலகயில் மயில்முருகா, வெனநினை யென தெதிரே,
பலபல களமணியே, பலபல பதமணியே,
கலகல கலவெனமா கவினொடு வரு மயிலே
குலவிடு சிகைமயிலே, கொணர்தியுன் இறைவனையே.

www.manthiras.com

இகலறு சிவகுமாரா, யெனநினை யென தெதிரே
சுகமுனிவரர் எழிலார், சுரர்பலர் புகழ்செயவே,
தொகுதொகு தொகுவெனவே, சுரநட மிடுமயிலே,4
குகபதிமயர் மயிலே, கொணர்தியுன் இறைவனையே.

கருணைபெய் கனமுகிலே, கடமுனிபணிமுதலே
அருணைய னரனெனவே யகநினை யெனதெதிரே,
மருமலர் அணிபலவே, மருவிடு களமயிலே,
குருபல வவிர்மயிலே, கொணர்தியுன் இறைவனையே.

திருச்சிற்றம்பலம்

பகைக் கடிதல் முற்றிற்று